# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.22/2023</u>

2025–ம் ஆண்டு ஜுன் திங்கள் 24–ஆம் நாள் செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைசாமி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1, பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.2, இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.3, வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.4, இறந்தவரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.5, இறந்தவரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.6, மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்கள் ம.சா.ஆ.7 (எண்ணம்– 2), 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பதிவு புத்தகம் நகல் ம.சா.ஆ.8, 1ம் எதிர்மனுதாரரின் வாகன காப்பீடு சான்று நகல் ம.சா.ஆ.9, 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.10, 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் தகுதிச்சான்று நகல் ம.சா.ஆ.11.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**</u>:

இறந்துபோன தேசிங்குராஜா என்னுடைய மூத்த மகன் ஆவார். என் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டதால் அவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் மகன் திருச்சியில் 6 மாதமாக வேலைபார்த்தார். என் மகன் வேலையை முடித்து விட்டு தினமும் இரவு 10, 10.30 மணியளவில் வருவார். மோட்டார் சைக்கிளை நான் என் மகனுக்காக ஆசைப்பட்டு வாங்கி கொடுத்ததாகும். இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு விபத்து சமயத்தில் இருந்ததாத என்று எனக்கு தெரியும். வட்டார போக்குவரத்து அலுவகலத்தில் இருந்து என்னுடைய வாகனத்தை அபராதம் செலுத்தி

எடுத்துவரவில்லை. மோட்டார் சைக்கிளின் காப்பீடு நிறுவனம் ரூ.15 இலட்சம் நஷ்டஈடு கொடுத்ததா என்றால் இல்லை. மேற்படி மோட்டார் சைக்கிளின் காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காப்பீடு நிறுவனத்திடம் இழப்பீடு கேட்டு மனு கொடுத்து நிலுவையில் உள்ளதா என்று எனக்கு தெரியாது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. பார்த்தவர்கள் சொன்னது வைத்து அரசு மருத்துவமனையில் போய் பார்த்தேன். அவர்கள் சொன்னதை வைத்து நான் புகார் கொடுத்தேன். நான் படிக்கவில்லை. நான் புகாரில் கூறியுள்ள சங்கதிகள் உண்மை. என் மகன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என் மகனின் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் என் மகனுக்கு தலையில் அடிப்பட்டு இறந்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கை எந்த நிலையில் உள்ளது என்று எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. புகாரை பொறுத்து பின்னிட்டு வேறு எந்த மனுவும் நீதிமன்றத்திலோ அல்லது காவல் துறை உயர் அதிகாரிகளிடமோ கொடுக்கவில்லை. விபத்து நடந்தது குறித்த 11.00 மணியளவில் கேள்விபட்டேன். விபத்து என் மகனின் கவனக்குறைவால் நடந்தது என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின்றி அதிகமாக நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பாலிசி விதிமீறல் உள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.